ந.க.எண்: அ1/79/2021

அகஸ்தீஸ்வரம், பேரூராட்சி அலுவலகம்,
நாள்:21.03.2022.

**ஒப்பந்த அறிவிப்பு**

அகஸ்தீஸ்வரம் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2021 – 2022 ல் கீழ்கண்ட வேலையை செய்வதற்கு ஒப்பந்த நமுனா நாள் 05–04–2022 மாலை 5.00 மணிவரை பெற்றுக் கொள்ளவும், பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் வரவேற்க்கப்படுகின்றன. ஒப்பந்தம் 06.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை செயல் அலுவலர் அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் சேர்க்க வேண்டும். ஒப்பந்தங்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது ஆஜராகி இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த நமுனா விலை ரூ | முன் வைப்புத் தொகை ரூ | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேரூராட்சிக்குட்பட்ட இடையன்விளை சக்தி கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் வேலை | 1200000 | 6240 | 24000 | மூன்று மாதம் |

**நிபந்தனைகள்**

1. ஒப்பந்த நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் உரிய தொகையை செலுத்தி 05.04.2022 பிற்பகல் 5.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தம் தாக்கல் செய்யும் போது மதிப்பீட்டில் 2% வைப்புத் தொகை ரொக்கமாக செலுத்தி அதன் ரசீதை இணைக்க வேண்டும் .
3. ஒப்பந்த தொகை எண்ணாலும் குறிப்பிட வேண்டும்.
4. ஒப்பந்தத்தில் குறைந்த நிரக்கு குறிப்பிட்டவரின் ஒப்பந்தம் மன்ற அங்கிகாரத்திற்குட்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.
5. ஒப்பந்தம் ஏற்று கொள்ளாதவரின் வைப்புத் தொகை மன்றத்தின் அங்கீகாரத்திற்கு பிறகு திருப்பி கொடுக்கப்படும்.
6. எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தங்கள் ஏற்று வழங்கப்படும் வேலைகளை வேலை ஆணை வழங்கிய குறிப்பிட்ட காலத்திற்குள் நல்ல முறையில் செய்து முடிக்க வேண்டும்.
8. 2021 - 2022 ம் ஆண்டு உரிமம் புதுப்பித்தவர்கள் மட்டும் டெண்டரில் கலந்து கொள்ளஇயலும்.
9. கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர் 21/3/22
அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி

நகல்:

1) அனைத்து ஒப்பந்தகாரர்கள்
2) அலுவலக விளம்பரம் பலகை,
3) அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகள்.